# செகண்டரி ஹைபர் டென்ஷன் இருந்தால்

# ரத்த அழுத்தத்தை முழுமையாக குணப்படுத்த முடியும்

## கே.எம்.சி.எச்.டாக்டர் மங்களகுமார் விளக்கம்

**கோவை, பிப். 21:** ரத்த அழுத்தம், சிறு நீரக நோய்கள் சம்பந்தப் பட்ட கேள்விகளுக்கு கே.எம். சி.எச்.மருத்துவமனை சிறுநீ ரக சிகிச்சை சிறப்பு நிபுணர் டாக்டர் மங்களகுமார் அளித்த பதில்கள்:

*** நாளமில்லா சுரப்பிகள் மூலம் அதிக இரத்த அழுத்தம் எவ்வாறு ஏற்படுகின்றது?**

நமது உடலில் பலவித நாள மில்லா சுரப்பிகள் உள்ளன. அவை அதிகமாகவோ அல்லது குறைவாகவோ செயல்பட்டால் இரத்த அழுத்தம் அதிகமாகலாம். உதாரணமாக 'தைராய்டு' சுரப்பி அதிகமாகவோ அல் லது குறைவாகவோ செயல்பட்டால் இரத்த அழுத்தம் அதிகமாகும். 'தைராய் டு' நோயை கட்டுப்படுத்தினால் இரத்த அழுத்தம் குணமடைய வாய்ப்பு உள்ளது. இது போல் வயிற்றுப் பகுதியில் உள்ள 'அட்ரினல்' என்ற நாளமில்லா சுரப்பி பலவித ஹார்மோன்களை சுரக்கின்றது. இதிலிருந்து வரும் 'ஆல்டோஸ்டீரோன்', 'கார்டீகோஸ்டீராய்டு', 'அட்ரீனலின்', 'நார் அட்ரீனலின்' ஆகிய ஹார்மோன் கள் அதிகமாகும்போது இரத்த அழுத்தம் அதிகமாகும். இந்த ஹார்மோன்களின் அளவை கட்டுப்படுத்தினால் இரத்த அழுத்தம் குணமடையும்.

***எந்தெந்த மருந்துகளின் பக்கவிளை வுகளினால் இரத்த அழுத்தம் அதிகமா கின்றது?**

வலி மருந்துகள், ஸ்டீராய்டு மருந்து, சிலவகையான கர்ப்பத்தடை மருந்துகள் மற்றும் சில போதை மருந்துகள் இரத்த அழுத்தத்தை அதிகப்படுத்தும்.

***எந்தெந்த சிறுநீரக நோய்கள் இரத்த அழுத்தத்தை அதிகப்படுத்தும்?**

சிறுநீரகம் சுருங்கி இருந்தாலோ, ஏராளமான நீர்க்கட்டிகள் இருந்தாலோ அல்லது நீண்ட நாட்களாக சிறுநீரகம் பழுதடைந்து இருந்தாலோ இரத்த அழுத்தம் அதிக மாகும்.



டாக்டர் மங்களகுமார்

***எப்பொழுது இரத்த அழுத்தத்தின் அடிப் படை காரணங்களுக்கு பரிசோதனை செய்ய வேண்டும்?**

ஒருவருக்கு அதிக இரத்த அழுத்தம் மற்றும் கீழே கொடுக்கப்பட்டுள்ள ஏதேனும் தொந்தரவி னால் பாதிக்கப்பட்டு இருந்தால் மேற்படி பரிசோதனை செய்து கொள்வது நல்லது. இளம் வயதில் இரத்த அழுத்தம் அதிகமாக இருப்பதை (40 வயதிற்கு கீழ்), கட்டுப்படுத்துவது மிகவும் சிரமமாக இருக்கும், திடீரென்று எடை கூடுதல் அல்லது குறைதல், காரணமில் லாமல் படபடப்பு, மூச்சு வாங்குதல், அளவுக்கு அதிகமான அசதி, சிறுநீரில் இரத்தம் வருதல் அல்லது சிறுநீரகம் வீங்கி இருத்தல், மேலே குறிப்பிட்டுள்ள மருந்து களை உபயோகிப்போர்கள், இரத்தத்தில் கால்சியம் உப்பு அதிகமாக இருத்தல் அல்லது பொட்டாசியம் குறைவாக இருத்தல் மற்றும் அதிக இரத்த அழுத் தத்துடன் மேற்கூறிய தொந்தரவுகள் இருந்தால் உடனடியாக பரிசோதனை செய்வது மிகவும் அவசியம். அதன் மூலம் 'செகண்டரி ஹைபர் டென்சன்' இருப் பது உறுதியானால் தகுந்த சிகிச்சை மூலம் அதிக இரத்த அழுத்தத்தை பரிபூரணமாக மருந்து இல்லாமல் குணப்படுத்த முடியும்.

மேலும் விபரங்களுக்கு, சிறுநீரக சிகிச்சை சிறப்பு நிபுணர் டாக்டர் மங்கள குமார், கே.எம்.சி.எச்.மருத்துவமனை, அவினாசி ரோடு, கோயம்புத்தூர். போன் : *+91422-4323214*, மொபைல் : *+91 8973192919* இ-மெயில் : *drmangalakumar@kmchhospitals.com* ஆகியவற்றிலும் தொடர்பு கொள்ளலாம்.

-Advt